

மேல்மலையனூர் தேர் திருவிழாவில் தீக்காயம் ஏற்பட்டு செஞ்சி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட பெண்ணை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,டாக்டர் திவ்யா உள்ளனர்.



நாகை மாவட்டம் நாகை ஒரத்தூரில் உள்ள அரசு மருத்தவக் கல்லூரி மருத்துவமனையில் 1,081 பயனாளிகளுக்கு ரூ. 5.04 கோடி மதிப்பிலான இலவச வீட்டு மனை பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் விலையில்லா வீட்டு மனைபட்டாவை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.ராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், உதயம் வே.முருகையன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

### கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், பொதுப் பணித்துறையில்

# புதியதாக பணி நியமனம் பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கு, பயிற்சி வகுப்பு!

## அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 18 -

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (16.03.2024) பொதுப் பணித்துறையில், புதியதாக நியமனம் பெற்ற 302 உதவிப் பொறியாளர்களுக்குப் பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து, உரையாற்றினார்கள்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையில்; கட்டடக் கலையின் தோற்றமும்வளர்ச்சியும் பற்றி விரிவாக விளக்கி கூறினார்கள்; ஆதியில் நாடோடியாக திரிந்துக் கொண்டிருந்த மனிதன், கலப்பையை கண்டறிந்தான். அதன் துணையால் நிலத்தை உழுது, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்ள அறிந்தான். நாடோடி வாழ்க்கையை விட்டுவிட்டு குறிப்பிட்ட இடத்தில் தங்கி வாழ நினைத்தான். விலங்குகளிடம் இருந்து, தற்காத்துக் கொள்ள ஆறாவது அறிவை பயன்படுத்தினான். அதன் விளைவாக, தன் குடும்பத்தோடு பாதுகாப்பாக வாழ புகலிடம் அமைத்துக்கொள்ள களிமண்ணால், சுவர் எழுப்பி, மரக்கழிகளை குறுக்கும், நெடுக்குமாக போட்டு, சருகுகளையும், தழைகளையும் கொண்டு வீட்டை உருவாக்கினான். பின்னர் நெருப்பினால் சுடப்பட்ட செங்கல்லை உற்பத்தி செய்தான். படிப்படியாக களிமண், ஓலைக் குடிசைகள், கல்வீடுகளாக மாற்றினான். கட்டடம், வீடு, அரண்மனை, மாடமாளிகைகள், கோயில்கள் எல்லாம் கட்டத் தொடங்கினான்.

தமிழர் கட்டடக் கலையில் இன்று, கலை மற்றும் அறிவியல் சார்ந்த தொழில் நுட்பங்களில், உலகே வியந்து, நிமிர்ந்து பார்க்கும் சாதனைகளை உள்ளடக்கியதே தமிழர் கட்டடக் கலை ஆகும். அக்காலத்தில் கட்டப்பட்டக் கோவில்களும், கோட்டைகளும், அணைகளும், தமிழர்களின் அறிவியல் நுட்பத்தையும், தொலைநோக்குத் திறனையும், கலை அறிவையும் பறைசாற்றுவதாக அமைந்துள்ளன.

**“கல்லு முலோகமும் செங்கலு மரமும்**

**மண்ணுஞ் சுதையும் தந்தமும் வண்ணமும்**

**கண்ட சர்க்கரையு மெழுகு மென்றிவை**

**பத்தே சிற்பத் தொழிற் குறுப் பாவன”**

என சங்க இலக்கியங்களில் கூறுவது போல்,

சுடுமண், மச்சு, மாடம், முற்றம், மூன்றில், காலதர், சாளரம் போன்ற கட்டக் கலைச் சொற்கள் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டடக் கலைக்கு மூன்று கூறுபாடுகள் உள்ளன அவை, 1) ஒரு கட்டடம் எதற்காக கட்டப்படுகிறதோ அதற்கான சமூக தேவைகளை நிறைவுசெய்ய வேண்டும். 2)பயன்படுத்தப்படும் பொருள் தரமாகவும், நீடித்து உழைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். 3) அதன்பின், கலைத் திறனுடன் இருக்க வேண்டும். பழந்தமிழர் கட்டடங்கள் அவற்றுக்கான சமூகத் தேவைகளை நிறைவு செய்தன. உறுதியாகவும், நீடித்து நிற்பவையாகவும், பொருத்தமாகவும் இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக கலையாகவும் இருந்தன. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக கட்டமைப்புகளை விரைவில் உருவாக்கும் ‘பிரிபேப்ரிகேட்டடு’ கட்டுமான யுக்தி மூலம் சில வாரங்களில் வீடுகளை அழகாக உருவாக்கி குடியேற இயலும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

கட்டடங்கள் பழுதாகக் காரணங்களைப் பற்றி பயிற்சிப் பெறுவர்களுக்கு விளக்கி கூறினார்கள் அவை, மண்ணின் தாங்கும் சக்தி குறைவு, கட்டட வடிவமைப்பில் குறைபாடுகள், ஒரு நோக்கத்தில் கட்டப்படும் கட்டடம் வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல், தரக்குறைவான கட்டுமானப் பொருட்கள், மோசமான தொழில் தன்மையில் கட்டடம் எழுப்புதல், கான்கிரீட் வேலைக்குப் பிறகு க்யூரிங் செய்யாமல் விடுதல், நிலநடுக்கத்தினால் உண்டாகும் பளுவை கணக்கில் கொள்ளாதது, அஸ்திவாரத்தை சுற்றி தேங்கி நிற்பது, அஸ்திவாரத்தை சுற்றி மரங்களை வளர்த்தல், முட்டுக் கொடுக்காமல் அஸ்திவாரத்திற்கு ஒட்டினாற்போல் பள்ளம் தோண்டுதல், எவ்வித எச்சரிக்கை நடவடிக்கையையும் எடுக்காமல் சுவர்களை இடித்தல், இப்பயிற்சி வகுப்பில் பங்குப் பெற்றுள்ள உதவிப் பொறியாளர்கள் அனைவரும் இதைப்போல காரணங்களை விரிவாக அறிந்து கொள்ளும்போதுதான், எதிர்காலத்தில் அவர்கள் மேற்கொள்ளும் கட்டடப் பணிகள் சிறப்பாக அமையும் என்று எடுத்துரைத்தார்கள்.

இப்பயிற்சி வகுப்புத் தொடக்க விழாவில், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (பொது) கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் டாக்டர்.கே.ஆயிரத்தரசு இராஜசேகரன், மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் எஸ்.இரகுநாதன், கோவை மண்டல தலைமைப் பொறியாளர் எஸ்.காசிலிங்கம், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் எ.வள்ளுவன், உணவுப் பொருள் வழங்கல் & பாதுகாப்புத் துறை தலைமைப் பொறியாளர், அன்பரசன், இந்து சமய அறநிலையத் துறை தலைமைப் பொறியாளர் பெரியசாமி மற்றும் இதர பொறியாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம் – குன்னம் தொகுதி

# செந்துறையில் ரூ.1.03 கோடியில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்!

அரியலூர், மார்ச் 18 -

அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி , செந்துறை ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களில் பள்ளிகள் சாலை, குடிநீர் தேவைகள், நியாய விலைக்கடைகள் அங்கன்வாடி மையங்கள் உள்ளிட்டவைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

அதன்படி செந்துறை ஊராட்சி ஒன்றியம், தளவாய் ஊராட்சி ஈச்சங்காடு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பகுதிநேர நியாய விலைக்கடையினை திறந்து வைத்து முதல் விற்பனையினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். பின்னர் அசாவீரன் குடிகாடு ஊராட்சியில் ரூ.22,00,000 மதிப்பில் புதிய நூலக கட்டடம் கட்டும் பணியினை துவக்கி வைத்து,பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, அசாவீரன் குடிகாடு கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக்கடை கட்டடத்தினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். பின்னர் பெரியாக்குறிச்சி கிராமத்தில் ரூ.39,95,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கிராம செயலக கட்டடத்தினையும் தொடர்ந்து பெரியாக்குறிச்சி ஊராட்சி, இலைகடம்பூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ.28,00,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ள 2 வகுப்பறை கட்டடத்தினையும் அதனைத்தொடர்ந்து. வஞ்சினபுரம் ஊராட்சியில் ரூ.13,57,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டடத்தினையும் மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் கங்காதாரிணி, கூட்டுறவுத்துறை இணைப் பதிவாளர் தீபாசங்கரி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பி.ஷீஜா, செந்துறை வட்டாட்சியர் வேலுமணி,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், ஜாகிர் உசைன், கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழி ல் மாறன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், ஊராட்சிமன்றத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதி நிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், ஊர் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில்

# ரூ.1 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் முடிவற்ற பணிகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கிவைத்தார்!

மரக்காணம், மார்ச் 18 -

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவற்ற பணிகளின் பெயர் பலகை திறப்பு விழா நிகழ்ச்சி மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி மரக்காணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளின் பெயர் பலகை திறந்து வைத்தும் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ்பழங்குடியின மக்களுக்குக்45 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 9 நபர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான ஆணையினை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசி அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

33 மாதம் திராவிட மாடல் ஆட்சியில் விழுப்புரம் மாவட்டத்தில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் தமிழ்நாட்டில் பழங்குடியின மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முதலமைச்சர் எடுத்து வருகிறார்.

மேலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தி பழங்குடியின மக்களுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கி அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காகவும் உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் ஒன்றிய அரசின் பங்களிப்பு 1.40 லட்சம் ரூபாயும், தமிழ்நாடு அரசின் பங்களிப்பு 3.60 லட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

பழங்குடியின மக்களுடைய வாழ்வாதாரத்தில் கண்ணும் கருத்துமாக உள்ள தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் இருந்து செலுத்துகின்ற வரியை திருப்பிக் கொடுக்க வேண்டும் என முதலமைச்சர் ஒன்றிய அரசாங்கத்திடம் கடிதம் வாயிலாக கேட்டுள்ளார். தமிழகத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்காக தமிழ்நாட்டின் உரிய வரித் தொகையை பங்கிட்டு சரியாக கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி கேட்டாலும் பெயரளவுக்கு மட்டுமே ஒன்றிய அரசாங்கம் கொடுப்பதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் குற்றம் சாட்டினார்.

இதைத் தொடர்ந்து மரக்காணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மரக்காணம், முன்னூர், கந்தாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 30 பழங்குடி இன மக்கள், மற்றும் ஆதிராவிடர் மக்களுக்கு இலவசவீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய துணை சேர்மன் பழனி, மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவல்லி குப்புராஜ் ,வட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருவேங்கடம், ஸ்ரீதர், ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் துறை சார்ந்த அலுவலர்கள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பூந்தமல்லியில் ரூ. 6 கோடி மதிப்பில் நவீன விளையாட்டு அரங்கம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

திருவள்ளூர் மார்ச் 18 -

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூந்தமல்லி நகராட்சி பேரறிஞர் அண்ணா பள்ளி வளாகத்தில் 3 ஏக்கர் பரப்பளவில் ரூ. 6 கோடி மதிப்பில் நவீன விளையாட்டு அரங்க கட்டுவதற்கு ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ தலைமை தாங்கி பணிகளை துவக்கி வைத்து அடிக்கல் நாட்டினார்

பூந்தமல்லி பகுதியில் மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் பயன்படும் வகையில் மிகப் பெரிய விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ நீண்ட காலமாக கோரிக்கை வைத்து வந்தார். இது தொடர்பாக பல்வேறு துறை அதிகாரிகளை நேரில் சந்தித்து மனு கொடுத்தும் வலியுறுத்தி வந்தார்.

இந்த நிலையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதியிலிருந்து விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதைடுத்து பூந்தமல்லி அறிஞர் அண்ணா ஆண்களை மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நவீன வசதிகளுடன் புதிய விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் க.ஸ்ரீதர், சென்னை பெருநகர வளர்ச்சி குழும செயற் பொறியாளர் ராஜன்பாபு, கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், தலைமை பொறியாளர் ரவிக்குமார், நகர் மன்ற உறுப்பினர் தீபா யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் திருவிளையாட்டம் ஊராட்சியில் வீரசோழனார் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டி தந்தால் பொறையார்மங்கைநல்லூர் சாலையில் இருந்து குரும்பங்குடி கிராமத்திற்கு 3 கிலோ மீட்டர் சுற்றி வரும் அளவு குறையும் என பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து ரூ 1.75 கோடி மதிப்பில் புதிய பாலம் கட்டும் பணி நடைபெற்றது. மயிலாடுதுறை மாவட்டக்கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் புதிய பாலத்திற்கு அடிக்கல் நாட்டி கட்டுமான பணியை தொடங்கி வைத்தார். உடன் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்ல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் குழு துணைத்தலைவர் பாஸ்கர் மற்றும் ஒன்றிய துணைச் செயலாளர் இளங்கோவன் மற்றும் கழகத்தனர் உள்ளனர்.

# மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் முதல்வர் பிறந்தநாள் விழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

திண்டிவனம், மார்ச் 18 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 71 வது பிறந்த நாள் முன்னிட்டு 1000 நபர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தென்களவாய் ஊராட்சியில் நடைபெற்றது.

தென்களவாய் ஊராட்சி மன்ற தலைவர் ஏழுமலை அனைவரையும் வரவேற்றார்.

மரக்காணம் ஒன்றிய துணை பெருந்தலைவரும், மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் பழனி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 1000 நபர்களுக்கு ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டிலான நலதிட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

# கூத்தாநல்லூரில் ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் நலத்திட்டங்கள்!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

திருவாரூர், மார்ச் 18 -

திருவாரூர் மாவட்டம், அம்மையப்பன் அரசு மேல் நிலைப் பள்ளியில் அமையவுள்ள புதிய வகுப்பறைகள் மற்றும் கூத்தாநல்லூர் சார்பதிவாளர் அலுவலக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் அவர்கள் தலைமை ஏற்று அடிக்கல்நாட்டினார்.மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ முன்னிலை ஏற்றார்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் நல்லாட்சியில் தமிழ்நாடு முழுவதும் மக்கள் பாராட்டும் வகையில் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அம்மையப்பன் அரசு மேல்நிலைப்பள்ளியில் அமையவுள்ளவுள்ள ரூ.55.32 இலட்சம் மதிப்பீட்டில் 1925 சதுர அடி பரப்பளவில் 3 புதிய வகுப்பறைகள் மற்றும் 2 புதிய கழிவறைகளுக்கு சட்ட மன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ ஆகியோர் அடிக்கல் நாட்டினர். ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

அதனைத்தொடர்ந்து, கூத்தாநல்லூர் நகராட்சியில் ரூ.155 இலட்சம் மதிப்பீட்டில் அமையவுள்ள புதிய சார்பதிவாளர் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் சட்ட மன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் நாட்டினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ ,நகர் மன்ற தலைவர் பாத்திமா பஷீரா , நகர செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

இந்நிகழ்வில், கூத்தா நல்லூர் நகர்மன்ற துணைத் தலைவர் சுதர்ஷன், அம்மையப்பன் ஊராட்சி மன்றத்தலைவர் முருகதாஸ், பள்ளி தலைமையாசிரியர் அருளானந்தம், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் கிருஷ்ணகிரி நகராட்சி 26 வது வார்டில் கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணி , கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் கட்டிகானபள்ளி ஊராட்சி சிமெண்ட் மற்றும் ஜல்லி சாலைகள், உணவு தானியக்கிடங்கு , காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம் அள்ளிசெட்டியில் ஊராட்சி மன்ற அலுவலகம் , நூலக கட்டிடம் , அங்கன்வாடி மையம் , நாகோஜன அள்ளியில் பள்ளி கட்டிடம் , கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் காட்டி நாயனப்பள்ளி சிமெண்ட் சாலை ஆகிய பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் தொடங்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி , பொருளாளர் கதிரவன், கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப், தலைமை செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப் , பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம் , ஒன்றிய கழக செயலாளர் கோவிந்தன் தனசேகரன் , மகேந்திரன் , தேங்காய் சுப்பிரமணி, சாந்தமூர்த்தி , பேரூர் கழக செயலாளர் தம்பிதுரை மற்றும் கழகப் பிரமுகர் அன்பரசன் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்